[பேரவைத் தலைவர்] [2016 பிப்ரவரி 20

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பதினான்காவது பேரவை நிறைவேற்றிய அலுவல்களை அறிவிப்பதற்கு முன்னால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த இந்த பொறுப்பில், நடுநிலை தவறாது பணியாற்றியுள்ளேன் என மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்துள்ள பாராட்டுதலுக்கு எனது நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களிலே சமர்ப்பிக்கிறேன்.

2016 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 2-55

மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தப் பாராட்டு ஒன்றையே என் பேறாக, கிடைத்தற்கரிய வரமாக, என் வாழ்நாளில் பெற்ற பெரும் பரிசாகக் கருதுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலராக விளங்கும் ஒரே தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கௌதம புத்தரைப் பார்த்து, அவருடைய சீடர்கள் கேட்டார்களாம், உலகத்திலேயே உயர்வானவர் எவர் என்று. புத்தர் சிரித்துக்கொண்டே சொன்னாராம், பள்ளத்திலே இருக்கிறவனைக் கைதூக்கி விடுபவர் எவரோ, அவர்தான் உலகத்திலேயே உயர்வானவர் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, தாழ்ந்து கிடக்கிற மக்களை, கடைக்கோடியில் இருக்கக்கூடிய மக்களை, ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்களைக் கைதூக்கிவிட்டு, கரை சேர்த்து, சிம்மாசனத்திலே அமர்த்தி, சிகரங்களாக உயர்த்தும் நம் சமூக நீதி காத்த சரித்திரத் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில், மிகப் பெரிய அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகத்தின் சட்டமன்ற வரலாற்றிலேயே, ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்கு வழிவகுத்தவர்கள் வரிசையிலே "மிக உயர்ந்தவர்" என்கின்ற அந்த உச்சத்தை எட்டியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தாழ்த்தப்பட்ட மக்களின் ஒளி விளக்காக, கலங்கரை விளக்கமாக, நம்பிக்கை நட்சத்திரமாகக் காண்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) சாதி, மத பேதங்களை வேரறுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) சவலைப் பிள்ளைகளை, சத்துள்ள பிள்ளைகளாக மாற்றும் தாயாக, பொருளாதாரத்தில் தாழ்ந்து கிடக்கும் இம்மக்களைப் பெருமைப்படுத்தும் அன்னையாக, ஆதி திராவிட மக்களின் வாழ்வை ஒளிமயமாக்கும் விடிவெள்ளியாக, பழங்குடியின மக்களின் வாழ்வின் பங்காளனாக, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிதாமகராக அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைக்கும் அன்னை தெரசாவாக,

[பேரவைத் தலைவர்] [2016 பிப்ரவரி 20

புரட்சி மலர் தோட்டத்திலே பூத்த தனிப் பூவாக, (மேசையைத் தட்டும் ஒலி) இருட்டு மேகத்தைக் கிழித்து வந்த எழுச்சி நிலவாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

பொது வாழ்விலே எனக்குக் கிடைத்த அத்தனை உயர் பதவிகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே அளிக்கப்பட்டவை என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். எல்லா இனத்தினரையும் ஒரு கோட்டிலே நிறுத்தி, நேர்க்கோட்டில் பார்க்கிற சமத்துவத் தலைவி, நமது காவியத் தாய் என்பதற்கு, நானே ஓர் எடுத்துக்காட்டு. ஒடுக்கப்பட்ட மக்களைக் கைதூக்கி விடுகிற மனப்பாங்கு, எண்ணம், ஈடுபாடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு எவருக்கும் கிடையாது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாளுக்கு என்னுடைய வாழ்த்துகளோடு, அவையினுடைய வாழ்த்துகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களிலே பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

வரும் மே திங்களில் மட்டுமல்ல, இனிமேலும், தமிழ் மேதினிக்கு, தாங்கள் மட்டுமே ஆதாரம் எனத் தெரிவித்து, 15-வது சட்டமன்றப் பேரவை, 16-வது சட்டமன்றப் பேரவை என இனி வரக்கூடிய சட்டமன்றப் பேரவைக் கூட்டங்களும் இங்கேயே, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலேயே நடைபெறும் என உரைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து பேரவைக் கூட்டங்களிலும் மாண்புமிகு அம்மா அவர்களே தொடர்ந்து தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருப்பார்கள், இருப்பார்கள் என்பதனைப் பணிவன்போடு தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் பேரவையின் சார்பிலே வாழ்த்துகளையும், என் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை ஐந்து ஆண்டு காலம் நிறைவேற்றிய அலுவல்களையும் என்னுடைய முழு உரையையும்[@] பேரவையின் அனுமதியோடு நடவடிக்கைக் குறிப்புகளில் இணைத்துக்கொள்ளலாம்.

[@] 1737 முதல் 1763 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.